05.04.2025

O.S.No.111/2012

பிவா.சா.2.திரு. துரைசாமி த.பெ. வெள்ளைசாமி

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

முதல் விசாரணை தொடர்ச்சி

நான் இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி தரப்பு 2 ம் சாட்சி ஆவேன். நான் ஏற்கனவே எனது தரப்பு சாட்சியங்களுக்கு 31.02.2024 ம் தேதி நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளேன். அப்போது பி.வா.சா.ஆ 1 ல் உள்ள எனது தந்தை வெள்ளைசாமியின் கையெப்பத்தை அடையாளம் காட்டி சாட்சியம் அளித்துள்ளேன். எனது தகப்பனார் கையெப்பமிட்டு எழுதி வைத்த 23.06.2009 ஆம் தேதிய உயில் ஆவணத்தின் அசலோடு ஒப்பீடு செய்யப்பட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அந்த ஆவணம் பி.வா.சா.ஆ 19 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த ஆவணத்தில் உள்ள கையெப்பம் என்னுடைய தந்தையின் கையெப்பம் தான். பி.வா.சா.ஆ 1ல் உள்ள சாட்சி கையெப்பமும் என்னுடைய தந்தையின் கையெப்பம் தான்.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறு ஒரு தேதியில் ஒத்தி வைக்கப்படுகிறது)**